பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 07 2024 **MONDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்கள் நலத்திட்டங்களின் பயன்கள் அதிகப்படியான மக்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்துமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி, பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.
2. நித்தி ஆயோக் கூட்டம் தொடர்பாக, மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டை மத்திய அரசு மறுத்துள்ளது.
3. மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பில் கல்வி தொலைக்காட்சி அலைவரிசைகளை அத்துறைக்கான அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் இன்று தொடங்கிவைக்கிறார்.
4. டோக்கியோவில் இன்று குவாட் அமைப்பின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்தில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.
5. பாரிஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>>

மக்கள் நலத்திட்டங்களின் பயன்கள் அதிகப்படியான மக்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்துமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி, பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தில் நேற்று நிறைவுரையாற்றிய அவர், மாநில அரசு நிர்வாகத்தை செம்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

இம்மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறந்த நிர்வாகத்திற்கான நடைமுறைகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

மத்திய அரசின் திட்டங்கள் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை மாநிலங்களில் அமல்படுத்தும்போது மாற்றம் எதுவும் செய்யக்கூடாது என்றும் இந்த கூட்டத்தில் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்த கூட்டத்தில் பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்திற்கு பின்னர் பிஜேபி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், நல்லாட்சிக்கு எடுத்துக்காட்டாக நலத்திட்டங்கள் அமைய வேண்டும் என்று இந்த கூட்டத்தில் பிரதமர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலத்திட்டங்களில் பொதுமக்களின் பங்கேற்புக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை ஐந்து ட்ரில்லியன் டாலராக உயர்த்த முடியும் என்றும் பிரதமர் கூறியதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

புதுதில்லியில் அண்மையில் நடைபெற்ற நித்தி ஆயோக் கூட்டத்தில் மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஒலிபெருக்கி அணைக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை மத்திய அரசு மறுத்துள்ளது.

பெங்களூருவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகள் சார்பில் இந்த கூட்டத்தில் செல்வி மம்தா பானர்ஜி கலந்துகொண்டு அவரது கருத்தை தெரிவித்ததாக கூறினார்.

அவரது உரை அனைவருக்கும் கேட்டது என்றும், ஆனால் கூட்டம் முடிந்தபிறகு இதற்கு நேர்மாறாக அவர் பேசி வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

நித்தி ஆயோக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் பங்கேற்று அவர்களது கருத்துக்களையும் தெரிவித்திருக்க வேண்டும் என்றும், மாறாக கூட்டத்தை புறக்கணித்தது நல்லதல்ல என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

தேசிய கல்விக்கொள்கை அமலுக்கு வந்து இன்றுடன் நான்காண்டுகள் நிறைவடைகிறது.

இதையொட்டி, புதுதில்லியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கலந்துகொண்டு, கல்வித்துறை சார்பில் பல்வேறு முன்முயற்சிகளை தொடங்கிவைக்கிறார்.

தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளை கற்றுக்கொள்வதற்காக தனித்துவமான கல்வி தொலைக்காட்சி அலைவரிசைகளை அவர் அறிமுகப்படுத்துகிறார்.

பள்ளிக்கல்வியை மன அழுத்தம் இல்லாமல், மகிழ்ச்சியுடன் கற்றலுக்கான முன் முயற்சிகளையும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல்களையும் அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அறிவாற்றலை மேம்படுத்தும் வகையில் புத்தகங்களையும் அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வெளியிட உள்ளார்.

<<<<<>>>>>

உச்சநீதிமன்றம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, சிறப்பு லோக் அதாலத்திற்கு உச்சநீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி கே வி விஸ்வநாதன் எமது செய்தியாளருக்கு அளித்துள்ள சிறப்பு பேட்டியில் இதனை தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - கே வி விஸ்வநாதன் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

குவாட் அமைப்பின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்தில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்கிறார். டோக்கியோவில் இன்று தொடங்கவுள்ள இரண்டு நாள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் ஜப்பான் சென்றுள்ளார்.

இந்த கூட்டத்தில் ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

குவாட் அமைப்பின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வது குறித்து இந்த கூட்டத்தில் இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் பிரதிநிதிகள் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைப்பார்கள் என்று வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

இந்திய பசிபிக் மண்டலத்தை சுதந்திரமாக ஸ்திரத்தன்மை கொண்ட வளமான பகுதியாக மாற்றுவதற்கு இந்நாடுகள் உறுதிபூண்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் அதிகப்படியான அளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், மேட்டூர் அணை வேகமாக நிரம்பி வருகிறது.

அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியுள்ளது.

டெல்டா பாசனத்திற்காக அணையிலிருந்து நேற்று மாலை முதல் வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, காவிரி கரையோரம் உள்ள மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கரையோரம் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லுமாறு மாவட்ட நிர்வாகங்களை, மாநில வருவாய் மற்றும் பேரிடர் நிர்வாகத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் காவிரி கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி சாந்தி அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று காவிரி கரையோரப் பகுதிகளையும், ஒகேனக்கல்லில் பரிசல் துறை, கூட்டு குடிநீர் திட்டத்திற்கு நீரேற்றும் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட அவர், ஒகேனக்கல்லில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்பு கருதி, சுற்றுலா பயணிகள் அருவிக்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சம்பா சாகுபடி தொடங்கும் முன்பு டெல்டா மாவடடங்களில் உள்ள ஏரி குளங்களை நிரப்ப வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்களிடம் அவர்கள் பேசினர்.

*(சவுண்ட் பைட் - விவசாயிகள் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச்சுடுதலில் பல்வேறு பிரிவுகளில் இந்தியா இன்று பங்கேற்கிறது.

மகளிர் பத்து மீட்டர் ஏர் ரைபிள் இறுதிப்போட்டியில் இந்தியாவின் ரமிதா ஜிண்டால் பங்கேற்கிறார்.

ஆடவருக்கான பத்து மீட்டர் ஏர் ரைபிள் இறுதிப்போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் பாபுடா பங்கேற்கிறார்.

பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் தகுதிச்சுற்று போட்டியில் மனு பாக்கர் - சரோப் ஜோத் சிங் இணையும், அர்ஜுன் சிங் சீமா – ரிதம் சங்வான் இணையும் பங்கேற்கிறது.

இன்று மாலை மணி 4.15-க்கு நடைபெறவுள்ள ஆடவர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா - அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென், பெல்ஜியத்தின் **'Julien Carraggi '** – ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டி இன்று மாலை 5.30 மணிக்கு தொடங்க உள்ளது.

முன்னதாக, இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை, ஜெர்மனியின் **'Mark Lamsfuss – Marvin Seidel** இணையை எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – தனிஷா இணை, ஜப்பானை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Pallekele**-ல் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இலங்கை, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 161 ரன் எடுத்தது.

162 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா விளையாட இருந்தபோது, மழை பெய்ததால் வெற்றி இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

எட்டு ஓவரில், 78 ரன் எடுத்தால் வெற்றி என்ற மாற்றியமைக்கப்பட்ட இலக்குடன் விளையாடிய இந்தியா, ஒன்பது பந்துகள் மீதம் இருக்கையில், மூன்று விக்கெட் இழப்பிற்கு, 81 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**<<<<<END>>>>>**